ஜனவரி – 25

# TNPSC துளிகள்

- மேகாலயா, மணிப்பூர், திரிபுரா ஆகிய மூன்று மாநிலங்கள் 2020 ஆம் ஆண்டு ஜனவரி 21 ஆம் தேதியன்று தங்கள் மாநிலங்களின் உருவாக்க தினத்தினைக் கொண்டாடின.
    - 1972 ஆம் ஆண்டில் இந்த நாளில், இந்த மூன்று மாநிலங்களும் 1971 ஆம் ஆண்டின் வடகிழக்குப் பிராந்திய (மறுசீரமைப்பு) சட்டத்தின் கீழ் முழு அளவிலான மாநிலங்களாக மாறின.
- நிலமதிப்பு நிறுவனமான டி.எல்.எஃப் ஆனது, சிங்கப்பூரின் இறையாண்மை நிதி நிறுவனமான ஜி.ஐ.சியின் ஆதரவுடன், சென்னையில் தரமணியில் ஒரு தொழில்நுட்பப் பூங்காவை உருவாக்க உள்ளது.
    - இதன் காரணமாக, சென்னையானது குருகிராமுக்கு அடுத்தபடியாக டி.எல்.எஃப் நிறுவனத்தின் இரண்டாவதுப் பெரியச் சந்தையாக மாற உள்ளது.

# தேசியச் செய்திகள்

## தேசிய ஊடக விருது

- தனியார் பதிப்பு நிறுவனமான "தி இந்து" குழுமத்தின் தலைவரான என்.ராம் என்பவர் தேசிய அளவில் சிறந்த ஊடக நபராக தேசிய ஊடக விருதுக்குத் தேர்வு செய்யப் பட்டுள்ளார்.
- இந்த விருதினை கேரள அரசின் கேரள ஊடக அகாடமி நிறுவியுள்ளது.
- தேசிய அளவில் தைரியமான மற்றும் புத்திசாலித்தனமான பத்திரிகைப் பணிகளுக்காக இந்த விருதானது வழங்கப்படுகின்றது.

# சர்வதேசச் செய்திகள்

## பிரெக்ஸிட்

- இங்கிலாந்து பாராளுமன்றமானது 2020 ஆம் ஆண்டு ஜனவரி 22 ஆம் தேதியன்று பிரெக்ஸிட் சட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இறுதியாக ஜனவரி 31 ஆம் தேதியன்று 28 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து இங்கிலாந்து நாடு விலகுவதற்கான விதிமுறைகளை அது ஏற்றுக் கொண்டுள்ளது.
- இரண்டாம் எலிசபெத் ராணி 2020 ஆம் ஆண்டு ஜனவரி 23 அன்று பிரெக்சிட் சட்டத்திற்கு தனது அரச முறையிலான ஒப்புதலை வழங்கினார். இந்த ஒப்புதலானது ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து இங்கிலாந்து சீராக வெளியேற வழி வகுக்கும்.
- இதன் மூலம் ஐரோப்பிய ஒன்றியம் என்ற ஒரு மிகப்பெரிய அமைப்பை விட்டு வெளியேறுகின்ற முதல் தேசமாக இங்கிலாந்து மாறுகின்றது.
- 2016 ஆம் ஆண்டு ஜூன் 24 அன்று நடைபெற்ற வரலாற்றும் முக்கியம் வாய்ந்த வாக்கெடுப்பில் ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு வெளியேறுவதற்கு இங்கிலாந்து மக்கள் வாக்களித்திருந்தனர்.

## ‘கவனத்தில் கொள்ள வேண்டிய நேரம்’ என்னும் அறிக்கை

- ஆக்ஸ்பாம் இன்டர்நேஷனல் நிறுவனமானது “கவனத்தில் கொள்ள வேண்டிய நேரம்” என்ற தலைப்பில் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது உலகளாவிய ஏற்றத்தாழ்வுகள் மற்றும் வறுமையை ஒழிப்பது ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துகின்றது.
- பாலின ஏற்றத்தாழ்வு நீக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை இந்த அறிக்கை பரிந்துரைத்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டில், உலகில் உள்ள 2,153 செல்வந்தர்கள் அனைவரும் இணைந்து உலக மக்கள் தொகையின் 60 சதவீத மக்கள் வைத்திருப்பதை விட (4.6 பில்லியன் மக்கள்) அதிகமான செல்வத்தைக் கொண்டுள்ளனர்.
- உலகின் பணக்காரர்களில் 1% பேர் 6.9 பில்லியன் மக்களை விட இரண்டு மடங்கு அதிகமான செல்வத்தைக் கொண்டுள்ளனர்.
- இந்த அறிக்கையின்படி, ஒரு தொழில்நுட்ப நிறுவனத்தின் உயர் தலைமை நிர்வாக அதிகாரி ஒரு வருடத்தில் பெறும் சம்பளத்தைப் போல் வீட்டுவேலை பணிபுரியும் ஒரு பெண் பணியாளர் பெறுவதற்கு 22,277 ஆண்டுகள் ஆகும்.
- 2018-19 ஆம் நிதியாண்டிற்கான இந்தியாவின் மொத்த நிதிநிலை அறிக்கையை விட, 63 இந்திய செல்வந்தர்களின் மொத்த செல்வம் அதிகமாக உள்ளது என்ற ஒப்பீட்டையும் இந்த அறிக்கையானது வெளிப்படுத்தி உள்ளது.
- நாட்டின் அடித்தட்டு மக்கள் தொகையில் 70 சதவீதத்தினரைக் கொண்டுள்ள 953 மில்லியன் மக்கள் வைத்திருக்கும் செல்வத்தை விட நான்கு மடங்கு அதிகமாக இந்தியாவின் பணக்காரர்களில் 1% பேர் வைத்திருக்கும் செல்வமானது உள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


## முப்பது மீட்டர் தொலைநோக்கி

- அமெரிக்காவின் ஹவாய் தீவிலிருந்து முப்பது மீட்டர் தொலைநோக்கியை இடமாற்றம் செய்ய இந்தியா விரும்புகின்றது.
- சுமார் 1,423 கோடி ரூபாய் மதிப்பிலான இந்தத் திட்டத்தின் தேவைகளில் 10%ஐ இந்தியா முதலீடு செய்துள்ளது.
- இந்த வானியல் ஆய்வகத்தின் கட்டுமானப் பணி நிறைவடைந்ததும், இந்த முப்பது மீட்டர் தொலைநோக்கியானது (Thirty-Meter Telescope - TMT) உலகின் மிகப்பெரிய பொது நோக்கங்களுக்காகப் பயன்படும் வானியல் ஆய்வகங்களில் ஒன்றாகவும், எளிதில் பார்க்கக் கூடிய மிகப்பெரிய ஒளியியல் தொலைநோக்கிகளில் ஒன்றாகவும் மாற உள்ளது.

- இது வானியலாளர்கள் பிரபஞ்சத்தின் வெளிப்புறங்களை ஆய்வு செய்வதற்கும் தொலைதூர நட்சத்திரங்கள் மற்றும் வெளிக் கோள்களை ஆய்வு செய்வதற்கும் அதிகமான விவரங்களைப் பெற அனுமதிக்கும்.
- ஹவாய் தீவில் உள்ள செயல்பாடு அற்ற மோனோ கியா எரிமலையின் மீது TMT அமைக்கப்பட முன்மொழியப் பட்டுள்ளது.
- இந்த எரிமலையானது ஹவாய் தீவின் பூர்வகுடி மக்களுக்கு ஒரு புனிதத் தளமாகும்.

***TMT பற்றி***

- TMT என்பது மிகப் பெரிய தொலைநோக்கி கொண்ட ஒரு வானியல் ஆய்வுக்கூடமாகும்.
- இது கனடா, சீனா, இந்தியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் அறிவியல்சார் அமைப்புகளால் நிதியளிக்கப்படும் ஒரு சர்வதேசத் திட்டமாகும்.
- TMT ஆனது புற ஊதாக் கதிர்கள் முதல் அகச்சிவப்புக் கதிர்கள் வரையிலான வானியல் கண்காணிப்புகளுக்காக வடிவமைக்கப் பட்டுள்ளது. பெறப்படும் மங்கலான படங்களைச் சரிசெய்ய உதவும் வகையில் ஒளியியல் கருவிகள் இதில் இடம் பெறுகின்றன.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்தியாவில் உள்ள மிகவும் மாசுபட்ட நகரங்கள்

- ஜார்க்கண்ட் மாநில நகரமான ஜாரியா ஆனது இந்தியாவின் மிகவும் மாசுபட்ட நகரமாகும். அதைத் தொடர்ந்து அதே மாநிலத்தைச் சேர்ந்த தன்பாத் ஆனது மாசுபட்ட நகரமாக உள்ளது.
- ஜார்க்கண்ட் மாநிலத்தின் இரட்டை நகரங்களான ஜாரியா மற்றும் தன்பாத் ஆகியவற்றில் நிலக்கரிச் சுரங்கப் பகுதிகள் அதிகம் உள்ளன.
- இந்த அறிக்கையின் படி, நாட்டின் மிகவும் மாசுபட்ட பத்து நகரங்களில் ஆறு நகரங்கள் உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ளன (நொய்டா, பரேலி, காசியாபாத், பிரயாக்ராஜ், பெரோசாபாத் மற்றும் மொராதாபாத்).
- மிசோரம் மாநிலத்தின் லுங்லே நகரமானது மிகக் குறைவான மாசுபட்ட நகரமாகும். மேலும் உலக சுகாதார அமைப்பின் (WHO) பரிந்துரைக்கப்பட்ட மட்டத்திற்கும் குறைவான அளவிலான நுண்மத் துகள்களைக் கொண்டுள்ள, இந்தியாவின் ஒரே நகரம் இதுவாகும்.
- அரசு சாரா சுற்றுச்சூழல் அமைப்பான “க்ரீன்பீஸ் அமைப்பின்” நான்காவது ஏர்போகாலிப்ஸ் என்ற அறிக்கையின்படி இந்த விவரங்கள் அறியப் பட்டுள்ளன.
- மத்திய அரசானது 2017 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு தேசிய


தூய்மையான காற்று என்ற ஒரு திட்டத்தை 2019 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது.

- இது எளிதில் அணுக முடியாத 102 நகரங்களில் 2024 ஆம் ஆண்டில் நுண்மத் துகள்கள் - 10 மற்றும் நுண்மத் துகள்கள் - 2.5 ஆகியவற்றின் செறிவுகளை 30% வரை குறைக்கும் இலக்கைக் கொண்ட ஒரு ஐந்தாண்டு செயல் திட்டமாகும்.
- க்ரீன்பீஸ் அமைப்பானது 1971 ஆம் ஆண்டில் கனடாவின் வான்கூவரில் நிறுவப்பட்டது. இதன் தலைமையிடமானது நெதர்லாந்தின் தலைநகரான ஆம்ஸ்டர்டாமில் உள்ளது.
- இந்தியாவில், இந்த அமைப்பின் தலைமையகமானது பெங்களூரில் உள்ளது.

# மாநிலச் செய்திகள்

## ஆந்திரப் பிரதேசத்தில் அமைய உள்ள 3 தலைநகரங்கள்

- ஆந்திரப் பிரதேச மாநிலச் சட்டமன்றமானது அம்மாநிலத்தில் மூன்று தலைநகரங்களை நிறுவுவதற்கான மசோதாவை நிறைவேற்றியுள்ளது.
- விசாகப்பட்டினத்தில் நிர்வாகத் தலைநகரம், அமராவதியில் சட்டமன்றத் தலைநகரம் மற்றும் கர்னூலில் நீதித்துறைத் தலைநகரம் ஆகிய மூன்று தலைநகரங்களை உருவாக்க அம்மாநில அரசு திட்டமிட்டுள்ளது.
- 2014 ஆம் ஆண்டில் தெலுங்கானா ஆந்திராவில் இருந்து பிரிக்கப்பட்ட போது, ஹைதராபாத் ஆனது இரு மாநிலங்களின் கூட்டுத் தலைநகராக, அதிகபட்சம் 10 ஆண்டுகள் வரை இருக்கும் என்று முடிவு செய்யப்பட்டது.
- சந்திரபாபு நாயுடு முதலமைச்சராக இருந்த போது, அமராவதியை ஆந்திராவின் தலைநகராக மாற்றுவதற்கு பெரும் முயற்சி எடுத்தார்.




### *இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களின் தலைநகர் நிலை*

- 2000 ஆம் ஆண்டு நவம்பரில் இருந்து டேராடூன் ஆனது உத்தரகாண்ட் மாநிலத்தின் "தற்காலிகத் தலைநகரமாக" செயல்பட்டு வருகின்றது.
- கெய்ர்சைன் உத்தரகாண்டின் வருங்காலத் தலைநகராக கருதப்படுகின்றது.
- ஒவ்வொரு ஆண்டும் கெய்ர்சைனில் ஒரு சட்டசபை அமர்வு நடைபெறுகின்றது.
- மகாராஷ்டிரா மாநிலமானது இரண்டு தலைநகரங்களைக் கொண்டுள்ளது. அவை - மும்பை மற்றும் நாக்பூர் (இது மாநில சட்டசபையின் குளிர்காலக் கூட்டத்தை நடத்துகின்றது) ஆகும்.
- இமாச்சலப் பிரதேசம் சிம்லா மற்றும் தர்மசாலா (குளிர்கால சட்டசபை அமர்வு) என இரு தலைநகரங்களைக் கொண்டு உள்ளது.
- முன்னாள் ஜம்மு-காஷ்மீர் மாநிலமானது ஸ்ரீநகர் மற்றும் ஜம்மு (குளிர்கால சட்டசபை அமர்வு) ஆகிய தலைநகரங்களைக் கொண்டிருந்தது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சுபாஷ் சந்திரபோஸ் ஆப்தா பிரபந்தன் புராஸ்கர் விருது 2020

- மத்திய உள்துறை அமைச்சகமானது 2020 ஆம் ஆண்டிற்கான சுபாஷ் சந்திரபோஸ் ஆப்தா பிரபந்தன் புராஸ்கர் விருது பெறும் வெற்றியாளர்களை அறிவித்துள்ளது.
- இந்த விருதானது நிறுவனப் பிரிவில் உத்தரகாண்ட் மாநிலத்தின் பேரிடர் குறைப்பு மற்றும் மேலாண்மை மையத்திற்கும் தனிநபர் பிரிவில் குமார் முன்னன் சிங் என்பருக்கும் வழங்கப்பட உள்ளது.
- இது ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 23 ஆம் தேதியன்று நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் பிறந்த நாளை முன்னிட்டு அறிவிக்கப் படுகின்றது.
- இந்த விருதானது பேரிடர் மேலாண்மைத் துறையில் இந்தியாவில் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் செய்த சிறந்தப் பணிகளை அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- குமார் முன்னன் சிங், 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியின் போது செய்த பாராட்டத் தக்கப் பணிகளை அங்கீகரிப்பதற்காக 2005 ஆம் ஆண்டில் தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் நிறுவன உறுப்பினராக நியமிக்கப் பட்டார்.

# முக்கிய தினங்கள்

## தேசியப் பெண் குழந்தைகள் தினம் - ஜனவரி 24

- இந்தத் தினமானது 2008 ஆம் ஆண்டில் மத்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் தொடங்கப்பட்டது.
- நாட்டில் பெண்கள் எதிர்கொள்ளும் அதிக ஏற்றத்தாழ்வுகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இத்தினத்தின் நோக்கமாகும்.
- சர்வதேசப் பெண் குழந்தைகள் தினமானது ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 11 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகின்றது.
- மத்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையானது 2020 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதி வரை தேசியப் பெண் குழந்தைகள் வாரத்தை அனுசரிக்கவுள்ளது.

## சர்வதேசக் கல்வி தினம் - ஜனவரி 24

- இந்தத் தினமானது மனித நல்வாழ்வு மற்றும் நீடித்த வளர்ச்சிக்கான முக்கிய காரணியாகத் திகழும் கல்வியின் சிறப்பை உணர்த்தும் விதமாக 2018 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் அறிவிக்கப்பட்டது.
- 2020 ஆம் ஆண்டிற்கான கருப்பொருள் - 'மக்கள், உலகம், வளர்ச்சி மற்றும் அமைதிக்கான கற்றல்' என்பதாகும்.

*கல்வியுரிமை பற்றி*

- மனித உரிமைகளுக்கான உலகளாவியப் பிரகடனத்தின் 26வது பிரிவில் கல்விக்கான உரிமை கூறப்பட்டுள்ளது.
- 1989 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான

மாநாடானது, உலக நாடுகள் அனைத்தும் உயர்கல்வியை அனைத்து மக்களும் அணுகக் கூடியதாக மாற்றும் என்று கூறியுள்ளது.

- நீடித்த வளர்ச்சி இலக்கு 4 ஆனது 2030 ஆம் ஆண்டுக்குள் "அனைத்துக் குழந்தைகளையும் உள்ளடக்கிய மற்றும் சமமான, தரமான கல்வியை உறுதி செய்வதோடு, அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்றல் வாய்ப்புகள் வழங்குவதை மேம்படுத்துவதையும்" நோக்கமாகக் கொண்டுள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★